## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி

**அசல் வழக்கு எண்: 255/2019 வா.சா.1**

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09ம் நாள் செவ்வாய்க்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : ஜெகஜோதிபெரியகருப்பன் தந்தை/கணவர் பெயர்: காவேரி பெரியண்ணன்**

---

**09.09.2025 :** 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

1. எனது தகப்பனார் காவேரி பெரியண்ணனும் 1ம் பி.வாதியின் தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தகப்பானார் குடும்பத்தில் 60 வருடத்திற்கு முன்பாகவே பாகபிரிவினை நடந்துவிட்டதுஎன்றால் இல்லை. இன்றுவரை பாகபிரிவினை செய்யப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதுவில் 4வது பத்தியில் தங்களுக்குரிய பாகங்களை சரிபாதியாக பிரித்துக்கொண்டு தற்காலிகமாக அனுபவித்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது தகப்பனாருக்கும் எனக்கும் 1ம் பி.வாதியின் தகப்பனாருக்கும் இடையே பாகபிரிவினை ஏற்பட்டுவிட்டது என்றாலும் நான் பாகபிரிவினை வழக்கு எனது தகப்பனார் மீது மட்டும் தான் தாக்கல்செய்யமுடியும் என்றால் சரியல்ல. எனது பிராதுவில் ராமையாவும், எனது தகப்பனாரும் பூர்வீக சொத்துகளை தவிர வேறு சில சொத்துகளை கிரையம் பெற்று அனுபவித்துவந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேறு சில சொத்துகளின் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. 7 இலக்க சொத்துகளுக்கு பாகபிரிவினை ஏற்படவில்லை என்று எழுத்துபூர்வமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாரும், 1ம்பி.வாதியின் தகப்பனாரும் சேர்ந்து வாங்கிய சொத்துகளின் சர்வே எண், பட்டா எண். தெரியாது. அவர்கள் இருவரும் தனித்தனியாக வாங்கிய சொத்துகளின் சர்வே எண், பட்டா எண். தெரியாது. நான் தாவா சொத்துகளில் 1/2 பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. 1வது இலக்க சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 10 செண்டு என்றால் சரியல்ல. 60 செண்டாகும். 1 ஏக்கர் 10 செண்டில் 50 செண்டு எனது அப்பா பெயரிலும், 60 செண்டு எனது தகப்பனார் பெயரிலும், 1ம் பி.வாதியின் தகப்பனார் பெயரிலும் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி 50 செண்டு எனது தகப்பனாரின் தனிப்பட்ட சொத்தாகும். மேற்படி 60 செண்டிற்கு கூட்டு பட்டா உள்ளதை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது இலக்க சொத்தான 7 செண்டு முழுவதும் 1ம் பி.வாதியின் தகப்பனார் பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்பதாலும் அவருக்கு தனித்த பாத்தியம் என்பதால் நான் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. 3வது இலக்க சொத்து எனது தகப்பனார் பெயரிலும், 1ம் பி.வாதியின் தகப்பனார் பெயரிலும் சரிபாதியாக பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 4வது இலக்க சொத்தான ஓட்டுவீடானது 1ம் பி.வாதியின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர் கருணாநிதி பெயரில் உள்ளது என்றாலும் அதில் எனக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல. 5வது இலக்க சொத்தான சர்வே எண். 138/3ஏ, 2 ஏக்கர் 69 செண்டு எனது தகப்பனார் பெயரிலும், 1ம் பி.வாதியின் தகப்பனார் பெயரிலும் பாகபிரிவினை ஏற்பட்டு பாதி சொத்து தற்போது 1ம் பி.வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால்

சரியல்ல. சர்வே எண். 138/3சி, பாதி சொத்து தற்போது 1ம் பி.வாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. 7வது இலக்க சொத்து சர்வே எண். 121/8பி முழுவதும் 1ம்பி.வாதிக்கு சொந்தம் என்றால் சரியல்ல. பாகபிரிவினை நடந்து முடிந்த பிறகு எனது தகப்பனார் 7 முதல் 11 பி.வாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்துகளை எழுதிக்கொடுத்துள்ளார். தாவா சொத்துகளை எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி விபரத்தை எனது பிராதுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. எனது தாயார் 7ம் பி.வாதி, 8 முதல் 11 பி.வாதிகளை சேர்த்து அவர்களுக்கு பாகம் உள்ளதாக கோரி பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4வது இலக்க சொத்தைபொறுத்து 1ம் பி.வாதி திருப்பத்தூர், உரிமையியல் நீதிமன்றத்தில் அவ.எண். 26/1998 வழக்கு தாக்கல்செய்து தீர்ப்பு பெற்று, சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டில் தீர்ப்பு பெற்று பின்னர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து 1ம் பி.வாதிக்கு சார்பாக தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் தெரியாது. மேற்படி வழக்கு தாக்கல்செய்த விபரமே எனக்கு தெரியாது. வழக்கிற்கும் 1ம்பி.வாதிக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கை வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சொத்துகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>8 முதல் 11 பி.வாதிகள் தரப்பில் கு.வி.:</u>**

4. 7ம் பி.வாதி எனது தாயார். 8 முதல் 11 பி.வாதிகள் எனது சகோதரிகள். தாவாசொத்துகள் எனது தகப்பனாருக்கும் 1ம்பி.வாதியின் தகப்பனாருக்கும் பூர்வீக பாத்தியம் என்றால் சரிதான். 4வது இலக்க சொத்தில் ஓட்டுவீடு, கூரை வீடு உள்ளது என்றால் சரிதான். அதில் எனது அப்பா கிழக்கு பகுதியில் வசித்து வந்தார். 1 முதல் 6 பி.வாதிகள் மேற்கு பகுதியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி வீடு இடிந்த பின்னர் அவரவர் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் 1ம் பி.வாதியின் தகப்பனாருக்கும் இடையே சட்டபடியான பாகபிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான். 1ம் பி.வாதி மாவட்டஉரிமையியல் நீதிமன்றம், திருப்பத்தூரில் அ.வ. எண். 26/1998 வழக்கு தாக்கல்செய்த விபரம் எனக்கு தெரியாது.

**<u>வாதி தரப்பு மறுவிசாரணை:</u>**

மேற்படி அவ.எண். 26/1998 வழக்கில் நான் தரப்பினர் கிடையாது.